**செ. கு. எண்:044** **நாள்: 15.04.2017**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

## அறிக்கை –15.4.2017

கன்னியாகுமரி மாவட்டம், அகத்தீஸ்வரம் வட்டம், ராஜாக்கமங்கலம்துறை, கேசவன்புத்தன்துறை மற்றும் கோவளம் ஆகிய கடலோர மீனவ கிராமங்களைச் சேர்ந்த திரு. வாஸ்தியன் என்பவரின் மகன் திரு.ஜோசப் சுகந்தன், திரு. ஜேசு என்கின்ற மைக்கேல் என்பவரின் மகன் திரு. ஜார்ஜ் அந்தோணி மற்றும் திரு.பியூஸ் என்பவரின் மகன் திரு.அருள் நெவில் ஆகிய மூன்று மீனவர்களும் சவுதி அரேபியாவில் ஒப்பந்த அடிப்படையில் மீன்பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, பலத்த காற்றின் காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், மூன்று மீனவர்களும் கடலில் மூழ்கியதில், இதில், திரு.ஜோசப் சுகந்தன் மற்றும் திரு.ஜார்ஜ் அந்தோணி ஆகிய இரண்டு மீனவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. திரு. அருள் நெவில் என்பவரின் உடல் கண்டெடுக்கபடவில்லை என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், புன்னக்காயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி சின்னையர் என்பவரின் மகன் திரு. பிரான்சிஸ் கடலில் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, கட்டுமரம் கவிழ்ந்ததில், கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; தூத்துக்குடி வட்டம், திரேஸ்புரத்தைச் சேர்ந்த திரு.பிரபாகரன் என்பவரின் மகன் திரு.ரோசன் என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், ரெட்டியார்பேட்டையைச் திரு. சின்னவபிள்ளை என்பவரின் மகன் திரு.ராமமூர்த்தி என்பவர் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, கடல் அலை மற்றும் காற்றின் வேகத்தினால் படகு கவிழ்ந்து, கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; சிதம்பரம் வட்டம், புதுகுப்பம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த திரு.பக்கிரிசாமி என்பவரின் மகன் திரு.பாவாடைசாமி என்பவர் கடல் அலை மற்றும் காற்றின் வேகத்தினால் படகு கவிழ்ந்து, கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டிணம் மீன்பிடிதளத்திலிருந்து விசைப் படகில் மீன்பிடிக்கச் சென்ற திரு. கஜேந்திரன் என்பவரின் மகன் திரு. பாக்கியராஜ் மற்றும் திரு.முருகேஷ் என்பவரின் மகன் திரு.விக்னேஷ் ஆகிய இருவரும் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், கடப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு பொன்னுரங்கன் என்பவரின் மகன் திரு.வேலு என்பவர் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, படகு கவிழ்ந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூரைச் சேர்ந்த திரு. தனபால் என்பவரின் மகன் திரு.ரத்தினம் என்பவர் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டிணத்தைச் சேர்ந்த திரு நாகூர்பிச்சை என்பவரின் மகன் திரு.பெத்தபெருமாள் என்பவர் கடலில் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட 11 மீனவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**